

சிவகங்கை மாவட்டம், குன்றக்குடியில் தமிழ்நாடு அரசின் சார்பில் தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் 100வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், மாவட்ட வருவாய் அலுவலர் மோகனசந்திரன், எஸ்.மாங்குடி எம்.எல்.ஏ. தேவகோட்டை கோட்டாட்சியர் எஸ்.பால்துரை, குன்னக்குடி சுப்பிரமணியன், வட்டாட்சியர் மாணிக்கவாசகம், மாவட்டக் கவுன்சிலர் திருமதி மஞ்சுரி லட்சுமணன் உட்பட பொதுமக்கள், அரசு அதிகாரிகள் மரியாதை செலுத்தினர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தருமபுரி மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஊரகப் பகுதிகளில் 'மக்களுடன் முதல்வர்' திட்டம் முகாம்களை தொடங்கி வைத்ததையடுத்து, மதுரை கிழக்கு வட்டம், கள்ளந்திரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மதுரை மாவட்ட அளவில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாமை தொடங்கி வைத்து பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) மோனிகாரானா, சட்டமன்ற உறுப்பினர்கள் சோழவந்தான் ஆ.வெங்கடேசன், மதுரை தெற்கு பூமிநாதன், மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல், மாவட்ட ஊராட்சி தலைவர் சூரியகலா கலாநிதி, மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் மணிமேகலை ராஜேந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### 'நீட்' தேர்வு ஆள்மாறாட்ட குற்றவாளிகளுக்கு ஆதரவாக

# தேசிய தேர்வு முகமை செயல்படுகிறதா என சந்தேகம்!

## உயர்நீதிமன்ற மதுரைக் கிளை கண்டனம்!

மதுரை, ஜூலை 12 -

நீட் தேர்வு ஆள்மாறாட்ட குற்றவாளிகளுக்கு ஆதரவாக தேசிய தேர்வு முகமை செயல்படுவதுபோல் சந்தேகம் எழுந்துள்ளதாக உயர்நீதிமன்ற மதுரைக் கிளை கண்டனம் தெரிவித்துள்ளது.

2019 இல் நடந்த நீட் தேர்வு ஆள்மாறாட்ட மோசடி தொடர்பான வழக்கு உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது, ஆள்மாறாட்டம் செய்தவர்கள் குறித்த ஆவணங்களை கொடுக்காதது ஏன் என தேசிய தேர்வு முகமைக்கு நீதிபதி கேள்வி எழுப்பினார்.

தேசிய தேர்வு முகமை அதிகாரிகளின் நடவடிக்கை குறித்து அதிருப்தி தெரிவித்த நீதிபதி, குற்றவாளி களுக்கு ஆதரவாக செயல்படும் அதிகாரிகள் வீடுகளில் ஏன் சோதனை செய்யக்கூடாது என ஒன்றிய அரசு வழக்கறிஞரை நோக்கி வினவினார்.

மேலும் நீட் தேர்வின்போது தமிழ்நாட்டில் மாணவிகளின் தாலியை கூட விடாத தேசிய தேர்வு முகமை, இந்தியாவிலேயே இல்லாத மாணவருக்காக 3 இடங்களில் தேர்வு எழுத அனுமதித்தது எப்படி? என்று கேள்வி எழுப்பினர்.

நீட் தேர்வு ஆள்மாறாட்ட குற்றவாளிகளுக்கு ஆதரவாக தேசிய தேர்வு முகமை செயல்படுவது போல் சந்தேகம் எழுவதாகவும் நீதிபதி கண்டனம் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்ய தேசிய தேர்வு முகமை கால அவகாசம் கேட்டதால், வழக்கு விசாரணையை வரும் திங்கட்கிழமைக்கு நீதிபதி ஒத்திவைத்தார்.

# சின்னாளப்பட்டி அருகே - அம்பாத்துரை கதிர்பட்டியில் மகா கும்பாபிசேகம்!

## அமைச்சர் ஐ.பெரியசாமி பங்கேற்பு!

திண்டுக்கல் , ஜூலை 12 -

சின்னாளபட்டி அருகே அம்பாத்துரை கதிர்பட்டியில் நடைபெற்ற ஸ்ரீபெருமாள்சுவாமி, ஸ்ரீவீருமல்லம்மாள் கோவில் மகாகும்பாபிஷேகத்தில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி கலந்துகொண்டு சிறப்பித்தார்.

அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு கோவில் கமிட்டியார்கள் பரிவட்டம் கட்டி உற்சாக வரவேற்பு அளித்தனர்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அம்பாத்துரை கதிர்பட்டியில் ஒக்காலிக்கர் காப்பு மாரங்குலவார் பங்காளிகளுக்கு பாத்தியப்பட்ட அருள்மிகு ஸ்ரீதேவி, பூதேவி சமேத ஸ்ரீபெருமாள் சுவாமி மற்றும் ஸ்ரீவீருமல்லம்மாள் திருக்கோவிலுக்கான கும்பாபிஷேகத்தை முன்னிட்டு 09.07.2024 - செவ்வாய்க்கிழமை கணபதி கோமம் நடைபெற்றது.

அதன்பின்னர் தீர்த்தம் முளைப்பாரி அழைத்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து விநாயகர் வழிபாடு, வருண வழிபாடு நடைபெற்றது. புதன்கிழமை காலை 6 மணியளவில் இரண்டாம் கால கோமம் நடைபெற்றது. காலை 9.30 மணியளவில் ஸ்ரீதேவி, பூதேவி சமேத பெருமாள் சுவாமி கோவில் மகாகும்பாபிஷேகத்தை முன்னிட்டு பட்டர்கள் கோவில் கலசத்தில் புனிதநீர் ஊற்றி கும்பாபிஷேகத்தை நிறைவு செய்தனர்.

அதனைத் தொடர்ந்து காட்டு தோட்டத்தில் உள்ள ஸ்ரீவீருமல்லம்மாள் கோவில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு யாகசாலை பூஜைகள் நடைபெற்றது. காலை 10.30 மணியளவில் தாடிக்கொம்பு ஸ்ரீசௌந்தரராஜ பெருமாள் கோவில் பட்டாச்சாரியார் என்.ஜெகநாதன் தலைமையில் பட்டர்கள் யாகசாலையில் வைக்கப்பட்ட புனித நீர் கலத்தை எடுத்துக்கொண்டு கோவிலை வலம் வந்தனர். 10.45 மணியளவில் பட்டாச்சாரியர்கள் புனித நீரை கோபுர கலசத்திற்கு ஊற்றி கும்பாபிஷேகத்தை நிறைவு செய்தனர்.

அதன்பின்னர் புனித நீர் கும்பாபிஷேகத்திற்கு வந்த பக்தர்கள் மீது தெளிக்கப்பட்டது. நூற்றுக்கணக்கான பக்தர்கள் காத்திருந்து தீர்த்தத்தை பெற்றுக்கொண்டனர்.

கும்பாபிஷேக விழாவில் ஆத்தூர் சட்டமன்ற தொகுதி தி.மு.க. உறுப்பினரும், தி.மு.க. மாநில துணைப்பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி கலந்துகொள்ள வந்தபோது கோவில் கமிட்டி தலைவர் ஸ்ரீமல்லுச்சாமி, செயலாளர் ஜாதிகவுண்டன்பட்டி மல்லையன், துணைப் பொருளாளர் ரெங்கசாமிபுரம் ராஜாமணி தலைமையில் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு மாலை மற்றும் பரிவட்டம் கட்டி உற்சாக வரவேற்பு அளித்தனர்.

நிகழ்ச்சியில் தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், தி.மு.க. நிர்வாகி அம்பை ரவி, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி துணை அமைப்பாளர் ப.ராஜேஸ் பெருமாள், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், அகரம் பேரூராட்சிமன்ற தலைவர் நந்தகோபால், தொப்பம்பட்டி ஊராட்சிமன்ற தலைவர் கருப்பையா, ஆத்தூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. அவைத்தலைவர் ஏ.சிவக்குமார், திண்டுக்கல் வடக்கு ஒன்றிய தி.மு.க. இளைஞரணி அமைப்பாளர் ஆர்.கதிரேசன் மற்றும் கோவில் கமிட்டியைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஆர்.குமரேசன், கோவில் கமிட்டி துணைச் செயலாளர் தூக்குனான்பட்டி துரை, பொருளாளர் கோட்டைப்பட்டி சுப்பிரமணி, கதிரிபட்டி ஆர்.காளிமுத்து உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சுவாமிக்கான அலங்காரத்தை கோவில் பூசாரி கதிர்பட்டி பி.மல்லு சிறப்பாக செய்திருந்தார்.

விழாவை முன்னிட்டு நடைபெற்ற அன்னதானத்தில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். கோவில் வளாகம் முழுவதும் மின் விளக்கு களால் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. விழாவிற்கான ஏற்பாடுகளை ஒக்காலிக்கர் காப்பு மாரங்குலவார் பங்காளிகள் மற்றும் திருக்கோவில் திருப்பணி குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர்.

### முன்னாள் துணைவேந்தர்கள் குறித்து அவதூறு:

# மேற்கு வங்க ஆளுநருக்கு சட்ட நோட்டீஸ்!

## மாநில கல்வியாளர்கள் சங்கம் அனுப்பியது!

கொல்கத்தா, ஜூலை 12-

பல்கலைக்கழகங்களின் முன்னாள் துணைவேந்தர்கள் குறித்து அவதூறாக பேசிய மேற்குவங்க ஆளுநர் ஆனந்த போஸுக்கு அம்மாநில கல்வியாளர்கள் சங்கம் சட்ட நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

மேற்குவங்க மாநிலத்தில் உள்ள பல்கலைக்கழகங்களின் முன்னாள் துணைவேந்தர்கள் குறித்து அம்மாநில ஆளுநர் ஆனந்த் போஸ் அவதூறாக பேசியதுடன், மிரட்டலும் விடுத்ததாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இந்நிலையில், ஆளுநருக்கு மேற்குவங்க மாநில கல்வியாளர்கள் சங்கம் மற்றும் பல்கலைக்கழகங்களின் முன்னாள் துணைவேந்தர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

ஆளுநர் தனது பேச்சுக்கு பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும், இல்லையென்றால் ஒவ்வொரு முன்னாள் துணைவேந்தர்களுக்கும் தலா 50 லட்சம் ரூபாய் நஷ்டஈடு வழங்கக் கோரி நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பாக ஆளுநர் ஆனந்த் போஸுக்கு மேற்குவங்க கல்வியாளர்கள் சங்கம் சட்ட நோட்டீஸ் ஒன்றையும் அனுப்பியுள்ளது.

ஆளுநர் ஆனந்த போஸ், தனது பேச்சுக்கு 7 நாட்களுக்குள் வருத்தம் தெரிவிக்காவிட்டால், அவர் மீது கண்டிப்பாக சட்ட நடவடிக்கை பாயும் என்று எச்சரித்துள்ளனர்.

### கவிஞர் நெல்லை குமார சுப்பிரமணியம் எழுதிய

# "நெஞ்சில் நிறைந்தோர்" நூல் வெளியீடு!

## டி.பி.எம்.மைதீன்கான் தலைமை! என்.மாலைராஜா - விஜிலா சத்தியானந்த் பங்கேற்பு!

நெல்லை, ஜூலை 12-

நெல்லை குமார கபிலன் இலக்கிய அறக்கட்டளை சார்பாக கவிஞர் நெல்லை குமார சுப்பிரமணியம் எழுதிய "நெஞ்சில் நிறைந்தோர்" நூல் வெளியிட்டு விழா 14.7.2024, ஞாயிற்றுக்கிழமை, மாலை 4.00 மணி அளவில் திருநெல்வேலி சந்திப்பு - ம.தி.தா. இந்துக்கல்லூரி மேல் நிலைப் பள்ளியில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் குமார கபிலன் இலக்கிய அறக்கட்டளை சு.நாச்சினார்க்கினியன் வரவேற்கிறார்.

மேனாள் அமைச்சர் - மத்திய மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் தலைமை வகிக்கிறார்.

மாநகர தி.மு.க. செயலாளர் சு.சுப்பிரமணியன் முன்னிலை வகிக்கிறார்.

மேனாள் சட்டமன்ற உறுப்பினர் என்.மாலைராஜா நூலை வெளியிடுகிறார்.

கிறிஸ்துவ ஆலயப் பணியாளர்கள் நலவாரியம் - தலைவர் திருமதி.விஜிலா சத்தியானந்த் நூலைப் பெறுகிறார்.

கவிதைப் போட்டியில் வெற்றி பெற்ற பாவலர். பாப்பாக்குடி அ.முருகன் (முதல் பரிசு), சண்முகம் புதுக்கோட்டை (இரண்டாம் பரிசு), தளவை இளங்குமரன் (மூன்றாம் பரிசு) ஆகியோருக்கு சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் ஏ.எல்.எஸ்.லட்சுமணன் பரிசு வழங்குகிறார்.

விழாவில் தமிழ் லெமுரியா அறக்கட்டளை நிறுவனர் (மும்பை) குமணராசன், முனைவர் கடவூர் மணிமாறன், ஐன்ஸ்டின் பொறியியல் கல்லூரி தாளாளர் அமுதவாணன் ஆலடி அருணா, மத்திய மாவட்ட பொருளாளர் வண்ணை சேகர், தி.க. மாவட்டச் செயலாளர் வேல்முருகன் ஆகியோர் வாழ்த்துரையாற்றுகின்றனர்.

விழாவில் நூலாசிரியர் குமார சுப்பிரமணியம் ஏற்புரையாற்றுகிறார்.

குமார கபிலன் இலக்கிய அறக்கட்டளை சு.புன்னைச்செழியன் நன்றி கூறுகிறார்.

### தனியார் பயிற்சி மையங்களில் படித்தவர்களே

# 'நீட்' தேர்வில் அதிகளவில் தேர்ச்சி பெற்றுள்ளனர்!

## உச்சநீதிமன்றத்தில் பிரமாணப் பத்திரத்தில் தேசிய தேர்வு முகமை ஒப்புதல்!

புதுடெல்லி, ஜூலை 12-

தனியார் பயிற்சி மையங்களில் படித்தவர்களே நீட் தேர்வில் அதிகளவில் தேர்ச்சி பெற்றுள்ளதாக, உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பிரமாணப் பத்திரத்தில் தேசிய தேர்வு முகமை தெரிவித்துள்ளது.

இளநிலை மருத்துவ படிப்பிற்காக இந்த ஆண்டு நடைபெற்ற நீட் தேர்வில், வினாத்தாள் கசிவு, கருணை மதிப்பெண், 67 பேருக்கு முழு மதிப்பெண்கள், ஆள்மாறாட்டம், ஒரே பயிற்சி மையத்தைச் சேர்ந்த பல மாணவர்கள் அதிக மதிப்பெண்கள் எடுத்தது என பல்வேறு முறைகேடுகள் அரங்கேறியது. இந்த முறைகேடுகள் குறித்தும் நீட் தேர்வு முடிவுகளை ரத்து செய்யக் கோரியும் உச்சநீதிமன்றத்தில் பல்வேறு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இது தொடர்பான வழக்கு, கடந்த 8ம் தேதி உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. அப்போது, நீட் தேர்வு நடத்தப்படும் விதம் மற்றும் நடைபெற்றுள்ள முறைகேடுகள் குறித்து விரிவான அறிக்கை தாக்கல் செய்யுமாறு தேசிய தேர்வு முகமைக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர். இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வரும் நிலையில், தேசிய தேர்வு முகமை நேற்று முன்தினம் பிரமாணப் பத்திரம் ஒன்றை தாக்கல் செய்தது.

அதில், இந்த ஆண்டு நடைபெற்ற நீட் தேர்வில் பயிற்சி மையங்களில் படித்த மாணவர்களே அதிக அளவில் தேர்ச்சி பெற்றுள்ளனர் என்றும், குறிப்பாக நீட் பயிற்சி மையங்கள் அதிகம் உள்ள ராஜஸ்தான், கேரளாவில் தேர்வு எழுதியவர்கள் அதிகளவில் ரேங்க் பட்டியலில் இடம் பிடித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீட் தேர்வு முடிவுகளை சென்னை ஐ.ஐ.டி மூலம் ஆய்வு செய்ததில் பயிற்சி மையங்களில் படித்தவர்கள் ரேங்க் பட்டியலில் இடம் பிடித்து இருப்பது தெரியவந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

மேலும் நீட் தேர்வில் முறைகேடு தொடர்பாக இதுவரை 153 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தேசிய தேர்வு முகமை தெரிவித்துள்ளது. நீட் தேர்வில் முறைகேடுகளில் ஈடுபட்டதாக 81 மாணவர்களின் முடிவுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும், முறைகேடுகளில் ஈடுபட்ட 54 மாணவர்கள் அடுத்த 3 ஆண்டுகள் நீட் தேர்வு எழுத தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் தேசிய தேர்வு முகமை தனது பிரமாணப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளது.





நெல்லை மாநகர விவசாய அணி சார்பில் சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி இம்மானுவேல் சேகரனார் அவர்களின் பிறந்தநாளை அரசு விழாவாக அறிவித்த முதலமைச்சர் – கழகத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா, கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு பிறந்தநாள் விழா, மாநில அளவிலான மாபெரும் மின்னொளி கபடி போட்டி ஆகிய நிகழ்ச்சிகள் நெல்லை மாநகர விவசாய அணி தலைவர் முத்து ஏற்பாட்டில் ஆகஸ்ட் மாதம் இறுதியில் கொண்டாடப்பட உள்ளது. அதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ள நெல்லை பேட்டை பகுதி மலையாள மேட்டில் முப்பிடாதி அம்மன் கோவில் மைதானத்தை மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் பார்வையிட்டார். உடன் பகுதிச் செயலாளர்கள் நமச்சிவாயம், அண்டன் செல்லத்துரை, மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் அலிஃப் மீரான், மலைக்கண்ணன், செல்லப்பா, கண்ணன், வினோத், பத்மநாதன், மணிகண்டன் மற்றும் கழகத்தினர் ஊர்மக்கள் உள்ளனர்.

### 750 ச.மீ.க்குட்பட்ட புதிய கட்டிடங்களுக்கு மின்இணைப்பு!

# கட்டிட நிறைவுச் சான்றிதழ் தேவையில்லை!

## தமிழ்நாடு அரசு தகவல்!

சென்னை, ஜூலை 12-

750 சதுர மீட்டர் பரப்பளவிற்குட்பட்ட புதிய கட்டடங்களுக்கு மின் இணைப்பு பெற கட்டிட நிறைவு சான்றிதழ் தேவையில்லை என தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், புதிய ஆணைப்படி பல்வேறு கட்டிடங்களுக்கு, மின் இணைப்பு பெற 'கட்டிட நிறைவு சான்றிதழ்' தேவை இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 14 மீட்டர் உயரம் மிகாமல் உள்ள 8 குடியிருப்பு அலகுகள் கொண்ட குடியிருப்பு கட்டிடங்கள், 750 சதுர மீட்டர் பரப்பளவிற்குட்பட்ட வீடுகள், 14 மீட்டர் உயரம் மிகாமல் 300 சதுர மீட்டர் கட்டிட பரப்பளவிற்குட்பட்ட வணிக கட்டிடங்கள் மற்றும் அனைத்து சிறு தொழிற்சாலை கட்டிடங்களுக்கு மின் இணைப்பு பெற கட்டிட நிறைவு சான்றிதழ் தேவையில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் பொதுமக்கள், வணிகர்கள், தொழில்துறையினர் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.



சுதந்திர போராட்ட தியாகி அழகு முத்துக்கோன் அவர்களின் 267 வது குருபூஜையை முன்னிட்டு கட்டாலங்குளத்தில் உள்ள சுதந்திரப் போராட்ட தியாகி அழகு முத்துக்கோன் அவர்களின் திருஉருவச் சிலைக்கு நெல்லை மாநகராட்சி மேயர் (பொறுப்பு) கே.ஆர்.ராஜு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் ஆவின் கல்யாணி, ராஜா, பட்டு,கோபால், துர்காராம், மூர்த்தி, லட்சுமணன், வினோத், மாரியப்பன், நம்பி பெருமாள், பாலகணேஷ், பாஸ்கர், மாதவன் ஆகியோர் உள்ளனர்.